செய்தி வெளியீடு எண்.224 நாள்:9.2.2022

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>புதுக்கோட்டை மாவட்டத்தில் உயிரிழந்த சிறுவன் நிதிஷ்குமார் குடும்பத்தாருக்கு ஆறுதல் மற்றும் நிவாரண உதவி – மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு</u>**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், பாப்பன்விடுதி கிராமத்தைச் சேர்ந்த திரு.நாடிமுத்து, திருமதி.போதினி தம்பதியினரின் ஒன்பது வயது மகன் நிதிஷ்குமார் எதிர்பாராத வகையில் உயிரிழந்த செய்தியினைக் கேட்டு மிகுந்த துயரமும், வேதனையும் அடைந்தேன். மகனை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிரிழந்த சிறுவன் நிதிஷ்குமாரின் குடும்பத்தாருக்கு ரூபாய் மூன்று இலட்சம், உடனடியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9